2006 ஜனவரி 17]

உருவாக்குகிற வகையில், மிகக் குறைந்த செலவிலே சோப்பு தொழிற்சாலையை உருவாக்கிட முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி நகரில் கதர் வாரியத்தின்மூலமாக சோப்பு தொழிற்சாலை தொடங்குவதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் வாரியத்தின்மூலம் தற்போது 24 சோப்பு உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மணமேல்குடி நகரின் அருகில் உள்ள கண்டனூர் என்கிற இடத்தில் வாரியத்தின் சார்பிலேயே சோப்பு அலகின்மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களின் தேவைகளை அறிந்துதான் சோப்பு உற்பத்தி செய்யப்படுகிறது கண்டனூரில். அதுமட்டுமல்ல, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அருகிலேயே திருச்சி மாவட்டம், சமயபுரத்திலே இருக்கிறது, நாஞ்சிக்கோட்டையிலே இருக்கிறது. ஆக, தேவைகளை வைத்துத்தான் சோப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தேவை அதிகமாக இருக்கிறபோது, மணமேல்குடி அருகிலே இருக்கிற கண்டனூரிலேயே உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

11—

நில ஆர்ஜிதம்

***50040—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டம், கரட்டூர் ஊராட்சி, ஆதி திராவிட மக்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்குவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன். கோயம்புத்தூர்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2006 ஜனவரி 17

மாவட்டம், உடுமலை வட்டம், கரட்டூர் ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க, கரட்டூர் அருகிலுள்ள புங்கமுத்தூர் கிராமத்தில் க. ச. எண் 244/1பி, 4பி மற்றும் 5 காலைகளில் 1.51.0 ஹெக்டேர் நிலம் கையகம் செய்து 63 பயனாளிகளுக்கு 25–10–2005 அன்று வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, உடுமலை வட்டம், புங்கமுத்தூர் ஊராட்சி, கரட்டூர் கிராமத்தில் 63 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்கப்பட்டதாகக் கூறினார்கள். உள்ளபடியே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு வகைகளிலே ஏழை, எளிய ஆதி திராவிட மக்களுக்குப் பட்டாக்களை முறையாகக் கொடுத்து வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்" என்பதற்கு இணங்க, வீட்டுமனைப் பட்டாக்கள் என்னுடைய தொகுதியில் கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் ஆதி திராவிட மக்களுக்கு, உடுமலை ஊராட்சியில் மட்டும், அந்தியூர் ஜெ.ஜெ. நகர், வாளவாடி ஜெ.ஜெ. நகர், செல்லப்பாளையம் ஜெ.ஜெ. நகர், பூலாங்கிணறு ஜெ.ஜெ. நகர், வல்லக்குண்டாபுரம், ஜல்லிப்பட்டி, மானுப்பட்டி, தீபாலப்பட்டி, மலையாண்டி கவுண்டலூர், மருள்பட்டி ஜெ.ஜெ. நகர், பாலப்பம்பட்டி ஜெ.ஜெ. நகர், ஜக்கம்பாளையம் ஜெ.ஜெ. நகர், கணபதிபாளையம், போடிபட்டி, கல்லாபுரம், வேல் நகர் மற்றும் மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாப்பாகுளம் ஜெ.ஜெ. நகர், சாலரப்பட்டி ஜெ.ஜெ. நகர், கிருஷ்ணாபுரம் ஜெ.ஜெ. நகர், சாமராயப்பட்டி ஜெ.ஜெ. நகர், பெருமாள்புதூர் ஜெ.ஜெ. நகர், கொமரலிங்கம் ஜெ.ஜெ. நகர், கும்பம்பாளையம், மயிலாபுரம் ஜெ.ஜெ. நகர், மடத்தூர், குளத்துபாளையம் போன்ற பல கிராமங்களில், வழங்கப்பட்டதோடு என்னுடைய தொகுதியில் மட்டும், பல ஆயிரம் ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கி உள்ளது. எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு ஆதி திராவிட மக்களின் சார்பிலே கோடானு கோடி நன்றியை எங்கள் தொகுதி மக்களின் சார்பாக மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுகாறும் இல்லாத அளவிற்கு ஏழை மக்களுக்குப் பட்டா வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் திரும்பவும் நன்றியைத் தங்கள் மூலமாகக் கூறிக்கொள்வதிலே மிகப் பெருமை அடைகிறேன். மேலும், எங்களது உடுமலை நகரத்திற்குட்பட்ட பகுதியிலே மாரியம்மன் கோயில் நிலம் தேர்வு செய்ததிலே 413 பேருக்கு வீட்டுமனைப் பட்டா தற்போது

2006 ஜனவரி 17]

கொடுக்கக்கூடிய நிலையிலே உள்ளது. அந்த இடங்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக 413 இலட்சம்—ஒவ்வொரு வீடும் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் சார்பிலே திரும்பவும் நன்றியை எங்கள் தொகுதி மக்களின் சார்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, இன்னும் என்னுடைய தொகுதியிலே ஒரு சில கிராமங்கள்—ஏ.கே. புத்தூர் கிராமம், மடத்துக்குளம் கல்கரை கிராமத்திலும், வாளவாடியிலே உள்ள வேலூரிலும் நில ஆர்ஜிதப் பணிகள் நடவடிக்கையில் உள்ளன. அதை விரைந்து கொடுக்கவும், உயர் நீதிமன்றத்திலுள்ள செல்லாண்டியம்மன் கோயில் பூமி பள்ளபாளையம் கிராமத்திற்கு உட்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு விரைந்து நில ஆர்ஜிதம் செய்து கொடுக்கவும் துரித நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு துரித நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மகாலிங்கம்.

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்”

என்கின்ற வள்ளுவன் வாக்கினைப்போல, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு மட்டும் 180 கோயில்களிலே அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அதன் வாயிலாக, அவினாசியிலே கருவலூர் மாரியம்மன் கோயிலிலும், அன்னூர் மண்ணீஸ்வரர் கோயிலிலும் அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சிக்கு எனது தொகுதிவாழ் மக்களின் சார்பாக எனது கோடானு கோடி நன்றி மலர்களைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதிக்குட்பட்ட மங்கரசுபாளையம் ஊராட்சியில் சுமார் 7 ஏக்கர் நிலம் ஆதிதிராவிடர்

நலத் துறைமூலமாக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் இலவசப் பட்டாக்கள் வழங்கப்படவில்லை. அதிகாரிகளுடைய மெத்தனப் போக்கினால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நடப்பு நிதியாண்டில் விரைவில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை அரசுக்கு வரப்பெறவில்லை; வந்தால் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 12, திரு. எ.வ. வேலு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

12—

பேருந்து வசதி

***18914—திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியம், க.ஆண்டாப்பட்டு கிராமத்திற்கு நகரப் பேருந்து சென்று வர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியம், க.ஆண்டாப்பட்டு கூட்டுச் சாலை வழியாகச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் அங்கு நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்கிறது. திருவண்ணாமலையிலிருந்து நடுப்பட்டு கிராமம் வரை நகரப் பேருந்து ஒன்று சமீபத்தில் புதிதாக இயக்கப்பட்டது. இப்பேருந்தினை நடுப்பட்டிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள க.ஆண்டாப்பட்டு கிராமம் வரை, சாலை சரிசெய்யப்பட்டவுடன் இயக்குவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*